

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (24.08.2023) சென்னை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில், ரூ.12.66 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்களை தொடங்கி வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். ரூ.8.72 கோடி மதிப்பீட்டில் நவீன 1.5 டெஸ்லா எம்.ஆர்.ஐ இயந்திரம் மற்றும் ரூ.3.94 கோடி மதிப்பீட்டில் குடல், இரைப்பை உள்நோக்கி கருவி. இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.இரா.சாந்திமலர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழுத் தலைவர்துரைராஜ், கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, கதிரியல் துறை மரு. ராகவி, குடல் இரைப்பை மருத்துவ நிபுணர் மரு.ராம்குமார், குடல் இரைப்பை அறுவை சிகிச்சை மரு.செந்தில்குமார், சிறப்பு அலுவலர் மரு.ரமேஷ் மற்றும் மருத்துவ பேராசிரியர்கள் உடனிருந்தனர்



மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை, மயூரநாதர் சுவாமி திருக்கோவில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவை முன்னிட்டு, நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகளை நேற்று (24.08.2023) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் ஆய்வு செய்தனர். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, ஆக 25-

மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் சேலத்தில் நடைபெற உள்ள கழக இளைஞர் அணி மாநில மாநாடு குறித்த செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் வரும் 27ஆம் தேதி நடைபெற உள்ளதாக வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார், அதன் விபரம்.



முத்தமிழ் அறிஞர், நாடு போற்றும் தமிழினக் காவலர், செம்மொழி கண்ட நாயகர், தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை மாவட்ட முழுவதும் மேலும் எழுச்சியுடன் கொண்டாடுவது மற்றும் சேலத்தில் நடைபெற உள்ள கழக இளைஞரணி மாநில மாநாட்டில் எழுச்சியுடன் பங்கேற்று சிறப்பிப்பது உள்ளிட்ட கழக ஆக்கப் பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் வரும் 27.08.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு திருப்பாலை பெண்கள் கல்லூரி அருகே அமைந்துள்ள குறிஞ்சி திருமண மஹாலில் மாவட்ட அவைத் தலைவர் எம்.ஆர்.எம் பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர், நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் என பெருந்திரளானோர் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கை மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தமிழ்நாடு அரசு ஊழியர்களின் குழந்தைகள் கல்வி

# பயில்வதற்கான கல்வி முன்பணம் உயர்வு!

சென்னை, ஆக 25-

கல்லூரி /பல் தொழில் நுட்ப கல்லூரியில் கல்வி பயிலும் அரசு ஊழியர்களின் குழந்தைகள் கல்வி செலவை ஈடுகட்ட உதவும் வகையில் கல்வி முன்பணம் என்ற வட்டியில்லா முன்பணம் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது அதில் அரசு ஊழியர்களின் ஒரு மாத அடிப்படை சம்பளம் அல்லது கல்வி முன்பணம்இதில்எதுகுறைவோ என்ற வரம்பின் அடிப்படையில் பெறலாம் என அரசாணை (நிலை) எண்.821, நிதி (சம்பளங்கள்) துறை, நாள். 13.06.1979-ல் ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட அரசாணை வெளியிடப்பட்டு முப்பதாண்டுகள் கடந்த நிலையில், அரசு ஊழியர்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களது குழந்தைகள் உயர்கல்வி பெறுவதற்கு வழங்கப்பட்டு வந்த கல்வி முன்பணத் தொகையானது கீழ்கண்ட நிபந்தனைகளுடன் தற்போது இவ்வரசால் உயர்த்தி ஆணையிடப்படுகிறது. இந்த உயர்த்தப்பட்ட கல்வி முன்பணத் தொகை 2023-2024 கல்வி ஆண்டிலிருந்து வழங்கப்படும்.

தொகுதி C மற்றும் D ஊழியர்களுக்கு, ஒரு மாத அடிப்படை ஊதியத்திற்கு சமமான தொகை அல்லது கீழே பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளில்எது அதிகமோ அத்தொகை அனுமதிக்கப்படும்.

தொகுதி A மற்றும் B அலுவலர்களுக்கு ஒரு மாத அடிப்படைஊதியத்தில் 50% அல்லது கீழே பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளில் எது அதிகமோ அத்தொகை அனுமதிக்கப்படும்.

அரசு ஊழியர்களின் குழந்தைகள் கல்வி பயிலும் நிலையில் - முந்தைய வரம்பு - தற்போது உயர்த்தப்பட்ட வரம்பு வருமாறு:

தொழில் முறை கல்வி - ரூ.2,500/- - ரூ.50,000/-,

கலை மற்றும் அறிவியல் கல்லூரி - ரூ.2,000/- - ரூ.25,000/-,

பல்தொழில்நுட்ப கல்லூரி - ரூ.1,000/- - ரூ.25,000/-.

இவ்வாறு தமிழ்நாடு அரசு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# இந்தியாவுக்கு வீரநாடு என்ற பட்டத்தை பெற்றுக் கொடுத்துள்ளார் வீரமுத்துவேல்!

## தந்தை பழனிவேல் பெருமிதம்!

விழுப்புரம், ஆக,25

சந்திரயான் 3 திட்ட இயக்குனர் ச.வீரமுத்துவின் தந்தை பழனி வேலு விழுப்புரத்தில் நேற்று நிருபர்களிடம் கூறுகையில், தமிழக மக்கள் மட்டுமின்றி, இந்திய மக்களும் மறக்க முடியாத நாள். என்னுடைய மகனிடம் இந்த திட்டத்தை கொடுத்ததிலிருந்து, ஏற்றுக் கொண்டதிலிருந்து சந்திரயான் 3 வெற்றி பெற வேண்டும் என்று பல மாதங்கள் முயற்சி எடுத் துள்ளார். அவரது முயற்சி வீண் போக வில்லை.

எனது மகனின் பெயருக்கு ஏற்றார்போல் வீர முத்துவேல் வீரனாக இருந்து வெற்றி பெற்றிருக்கிறார். இந் தியாவை வீர நாடு என்ற பட்டத்தை பெற்றுகொடுத்துள்ளார். இன்று இந்திய மக்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். இந்தியா பெருமைக்குரிய நாடாக, சிறந்த நாடாக திகழ்ந்து கொண்டிருக்கிறது.

குறிப்பாக ரஷ்யா விண்கலத்தை நமக்கு போட்டியாக விட்டு தோல்வி அடைந்தது. இந்தியா வெற்றி பெற்றதன் மூலம் மிகப்பெரிய வல்லரசு நாடாக திகழக்கூடிய அளவிற்கு பெருமைக்குரிய நாடாக வந்திருக்கின்றது. குறிப்பாக பிரதமர் சந்தோஷமாக இருக்கிறார்.சந்திராயன் திட்டம் பொறுப் பேற்றதிலிருந்து வீரமுத்துவேல் குடும்பத்தில் யாரிடமும் சரியாக பேசுவது கிடையாது. கடந்த 21ம் தேதி உடன்பிறந்த சகோதரி திருமணத்திற்கு கூட வரவில்லை. குடும்ப நிகழ்ச்சிக்கும் வந்தது கிடையாது. நானும் அவரது வேலைதான் முக்கியத்துவம் அதில் கவனம் செலுத்துமாறு கூறினேன். திருமணத்திற்கு வருவதை விட இன்று(நேற்று) அதிக சந்தோஷம் கிடைத்துள்ளது' என்றார்.



# வடகிழக்குப் பருவ மழையை முன்னிட்டு

# அனைத்து மண்டலங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

## சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, ஆக. 25-

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள அடிக்கடி கழிவுநீர் தடைபட்டு செல்லும் தெருக்களில் உள்ள கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் இயந்திர நுழைவாயில்களில் உள்ள கசடுகளை அகற்றிட தூர்வாரும் பணிகள் 25.08.2023 முதல் 02.09.2023 வரை மேற்கொள்ளப்படவுள்ளது.

முதற்கட்டமாக, மேற்குறிப்பிட்ட பகுதிகளில் 720 தெருக்களில் அமைந்துள்ள 5,277 இயந்திர நுழைவாயில்களில் 300 தூர்வாரும் இயந்திரங்கள், 142 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 35 கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் 60 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் ஆக மொத்தம் 537 கழிவுநீர் இயந்திரங்கள் மூலம் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் இயந்திர நுழைவாயில்களில் உள்ள கசடுகளை அகற்றிட தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்தூர்வாரும் பணிகள் மூலம் கழிவுநீர் தடைபட்டு செல்லும் குழாய்களில் கசடு நீக்கப்பட்டு கழிவுநீர் கட்டமைப்பு திறன் மேம்படுத்தப்படும். மேலும், வழக்கமாக நடைபெறும் தூர்வாரும் பணிகள் அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் என்று சென்னை குடிநீர் வாரியம் அறிவித்துள்ளது.

## ஆர்.பிரபாகரன், டி.கவியரசு ஏற்பாடு! சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில்

# ஜார்ஜ் டவுன் நீதிமன்றத்தில் இளம் வழக்கறிஞர்களுக்கு சட்டப் புத்தகங்கள்!

## ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி, என்.மருதுகணேஷ் வழங்கினர்! ஜி.எம்.தேவன் பங்கேற்பு!

சென்னை ஆக:25

சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளையொட்டி நடைபெற்று வரும் தொடர் நிகழ்ச்சிகளில் ஏழாவது நிகழ்ச்சியாக ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் அருகே திமுக வழக்கறிஞர் அணி உறுப்பினர் சேர்த்தல் மற்றும் புதுப்பித்தல் முகாம் மற்றும் இளம் வழக்கறிஞர்களுக்கு சட்டப் புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி வழக்கறிஞர்கள் ஆர்.பிரபாகரன், டி.கவியரசு ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் இரா. மூர்த்தி, மாவட்ட அமைப்பாளர் என்.மருதுகணேஷ், ஆகியோர் இளம் வழக்கறிஞர்களுக்கு சட்டப் புத்தகங்கள் வழங்கினர்.

கிழக்கு மாவட்ட துணை செயலாளர் ஜி. எம்.தேவன் பங்கேற்றார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் பின் திமுக வழக்கறிஞர் அணி புதிய உறுப்பினர் சேர்த்தல் மற்றும் புதுப்பித்தல் முகாம் நடைபெற்றது. அதன்பின் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கு சட்டப் புத்தகங்கள் வழங்கப்பட்டது.

இதில் வழக்கறிஞர்கள் டி.சுபாஷ் சந்திர போஸ், கே.பொம்முராஜ், ஜே. ராஜேந்திரன், எஸ்.சேகர், எஸ்.சரவணகுமார், ஜெ. தரணிதரன், எஸ்.ராஜேஷ், ஏ.கே.உமாசங்கர், சி.ஸ்ரீதர், எஸ்.ஜெயாவினோத் ஸ்ரீதர், இ.வெங்கடேஷ் குமார், எம்.ரூபசங்கர், ஏ. அசோக்குமார், டி.கிருஷ்ணமூர்த்தி, டி.சீனிவாசன், ஆர்.வேலுச்சாமி, சி.பீட்டர், வெற்றிச்செல்வன், கே.சக்திவேல், கே.ராதாகிருஷ்ணன், வி.கார்த்திக், எஸ்.சசிதரன், ஆர்.தங்கேஸ்வரன், எச்.கருணாகரன், ஆர்.மகேஸ்வரன், ஜி.கோகுல், கே.பழனியப்பன், எஸ்.மோகனசுந்தரம், சுகன்யா சீனிவாசன், என்.எஸ்.வேந்தகுமார், எம்.டி.மதன்ராஜ், கே.பி. சதீஷ்குமார், ஆர்.ராஜன், பி.கருணாநிதி, ஜி.சௌந்தர்ராஜன், எஸ்.சரவணன், ஜி.எம்.மணிவேலன், டி.பிரபு, கே.சரத்குமார், கே.பூங்கொடி, இரா.சேகுவாரா, எம்.ஏ.நூருல்ஹமீம், கே.பிரசாத், ஏ. ஸ்டீபன், எஸ்.பாபு, எஸ். அசோக், டி.முருகன், இரா. காவிரி, செல்வன், எச்.சாய்நாத், எல்.சத்யா, பி.அஜய்குமார், உள்ளிட்ட ஏராளமான வழக்கறிஞர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியின் போது திமுக வழக்கறிஞர் அணியில் சேர ஆர்வமுடன் வழக்கறிஞர்கள் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சூலூர் பாவேந்தர் பேரவை

# புலவர் செந்தலை ந.கவுதமன் துணைவியார் திருமதி உலக நாயகி மறைவு!

## பெரியாரியச் சிந்தனையாளர்கள் – கழகத்தினர் அஞ்சலி!

கோவை, ஆக. 25-

சூலூர் பாவேந்தர் பேரவை புலவர் செந்தலை ந.கவுதமன் அவர்களின் துணைவியாரும், பல்லடம் அரசு மேல்நிலைப் பள்ளி முன்னாள் தலைமையாசிரியர் சூ.ப.அரங்கசாமி (எஸ். பி.ஆர்.) பள்ளபாளையம் சானகி இணையரின் மகளுமான சூ.அர.உலகநாயகி பி.ஏ.,பி.எட்., அவர்கள் தம் 62ஆம் வயதில் 23.8.2023 இரவு 11.45 மணிக்கு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்

மறைந்த உலக நாயகி அவர்கள், செகதாம்பாள் எனும் இயற்பெயரைத் தமிழுணர்வால் உலகநாயகி எனச் சட்டப்படி மாற்றிக் கொண்டவர்.

தாலி நீக்கிய சுயமரியாதைத் திருமணம் ஏற்று, உறுதியான பகுத்தறிவு வாழ்வை மன நிறைவோடு மேற்கொண்டவர்.

மகள் க. தாய்மொழி, மருமகன் மரு.கு.இளந்தமிழன், பெயர்த்தி தா.இ.அவனிஇளமொழி முதலான அனைவரின் வளர்ச்சிக்கும் அடித்தளமாகத் தம் வாழ்வை அமைத்துக் கொண்டவர்.

அன்னாரது மறைவுச் செய்தி அறிந்து பெரியாரியச் சிந்தனையாளர்கள், கழகத்தினர், பாவேந்தர் பேரவையினர் உள்ளிட்ட ஏராளமானோர், அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

சூலூர் எஸ்.வி.எல்.நகர் 'தாயகம் ' இல்லத்திலிருந்து நேற்று (24.8.2023-வியாழன்) பகல் 12.00 மணிக்கு அன்னாரது இறுதி ஊர்வலம் புறப்பட்டு சூலூர் சமத்துவ வனம் மின்மயானத்தில் மதியம் 1.00மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

# பெருநகர சென்னை மாநகராட்சி

# வாகன நிறுத்த நடைமுறைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்!

## மேயர் பிரியா தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக. 25 -

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வாகன நிறுத்த நடைமுறைகளை சிறப்பாக மேம்படுத்துதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மேயர்

ஆர்.பிரியா தலைமையில் நேற்று (24.08.2023) நடைபெற்றது.

மேயரின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வாகன நிறுத்த நடைமுறைகளை சிறப்பாக மேம்படுத்துதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன்,, முன்னிலையில் நேற்று (24.08.2023) ரிப்பன் கட்டட அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர். லலிதா, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மாநகராட்சியில் நீண்ட நாட்களாக கேட்பாரற்று கிடக்கும் வாகனங்களையும், பழுதாகி நிற்கும் வாகனங்களையும் அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனைத் தொடர்ந்து, சாலைகளில் வாகன நிறுத்தத்தை மேலும் திறம்பட மேற்கொள்வதற்கு மண்டல வாரியாக 3 தனித்தனி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும் என்றும், முதற்கட்டமாக பன்னடுக்கு வாகன நிறுத்தக் கட்டமைப்பு மேம்பாட்டிற்காக சென்னை மாநகரில் திருவொற்றியூர் நகராட்சி வணிக வளாகக் கட்டடம், திருவொற்றியூர் நகராட்சி மருந்தகக் கட்டட வளாகம், புல்லா அவென்யூ பழைய வளாகம், ஈ.வெ.ரா. சாலையில் ஈகா திரையரங்கம் எதிரில் உள்ள வளாகம், ராஜா அண்ணாமலை புரம் காம்ப்ளக்ஸ், சி.பி. ராமசாமி சாலையில் உள்ள வளாகம், டாக்டர் நாயர் சாலை பழைய காம்ப்ளக்ஸ், என்.எஸ்.கே. சாலை கோடம்பாக்கம் மண்டல அலுவலகம், ஆற்காடு சாலைவளசரவாக்கம் மண்டல அலுவலகம், அடையாறு மண்டலம்இந்திரா நகர், 3ஆவது அவென்யூ சாலையில் உள்ள வணிக வளாகம் ஆகிய 10 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த வாகன நிறுத்த இடங்களுக்கு சாத்தியக் கூறுகளுக்கான அறிக்கை தயாரிக்கப்பட்டு அது வாகன நிறுத்த மேலாண்மைக் குழுமத்தின் பரிசீலனையில் உள்ளது. மேலும், நகரின் வாகன நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அமலாக்க உத்திகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. வாகன நிறுத்தம் மற்றும் போக்குவரத்து மேலாண்மைக் குழுமத்தால் வாகன நிறுத்தக் கொள்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள அனைத்து சவால்களும், வாகன நிறுத்தக் கொள்கையில் தீர்வு காணப்படும் என்றும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி கும்முடிப்பூண்டி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி புதுகும்முடிப்பூண்டி சுண்ணாம்புகுளம் ஆரம்பாக்கம் எளாவூர் மற்றும் கவரைப்பேட்டை அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா சைக்கிள்களை மாவட்ட கழக செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்ட மன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். உடன் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், இரா. அவறிழகன், கா.சு.ஜெகதீசன், சகிலா அறிவழகன், எம்.கேசவன், எஸ்.உதயகுமார், எம்.ஆர்.ஸ்ரீதர் டி. மஸ்தான், பரத்குமார், கே.இ.திருமலை, அரிதாஸ், காளி, ரா.ரமேஷ், டி.கே.ராஜா, நரேந்திரன், பி. அறிவழகன், அப்துல்கரீம், காமாட்சி, சுந்தரி, மா.அருள், விஜய், வின்செண்ட், உமாபதி, அர்ஜீன், மோ.பிரசாத், எஸ்.ஏ.வெங்டேசன், குமரபூபதி, குப்பன், தீனதயாளன், பொன்சாந்தி, அராப்பு பாபு திருநாவுக்கரசு, இளவரசன், ஏலியம்பேடு, பாலா, பனப்பாக்கம் கஜேந்திரன் உள்ளிட்ட கழகத தோழர்கள் பங்கேற்றனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவாலங்காடு ஒன்றியத்தைச் சேர்ந்த நல்லாட்டூர் ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கலைஞரின் வருமுன் காப்போம் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் கலந்து கொண்டு மருத்துவ முகாமை தொடங்கிவைத்து கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்ட சத்து பெட்டகங்களும்,பார்வை குறைபாடுள்ள மாணவர்களுக்கு மூக்கு கண்ணாடிகளையும் வழங்கி பார்வையிட்டார் உடன் திருவாலங்காடு மேற்கு ஒன்றிய செயலாளர் கூளூர் எம்.ராஜேந்திரன், உள்பட மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மருத்துவர்கள் அதிகாரிகள் பொதுமக்கள் உள்ளனர்.